## நோயாளிளைப் பார்க்கச் செல்லும்போது ஓதவேண்டிய துஆ

1 ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ர) அவர்கள் இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள், ஒருவர் ஒரு நோயாளியைப் பார்க்கச்சென்று, அந்த நோயாளி மரணத்தருவாயில் இல்லாத ஒருவராக இருப்பாரானால், அந்த இடத்தில் இந்த துஆவை ஏழு முறை ஓதினால், அல்லாஹ் தஆலா அந்த நோயாளிக்கு நிவாரணம் அளிப்பான்

أَسْأَلُ اللَّهَ الْعَظِيمَ ، رَبَّ الْعَرْشِ الْعَظِيمِ أَنْ يَشْفِيكَ وَيُعَافِيَكَ

*பொருள்: மகிமைமிக்க அல்லாஹ் மற்றும் மகத்துவம் வாய்ந்து அந்த அர்ஷின் அதிபதியான அல்லாஹ்விடம் உமக்கு நிவாரணம் அளிக்குமாறும் நோயற்ற வாழ்வளிக்குமாறும் துஆ கேட்கின்றேன்* (அபு தாவூத், திர்மிதி)

2 ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ் (ர) அவர்கள் அறிவிக்கிறார்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் ஒரு கிராமப்புற நோயாளியைப் பார்ப்பதற்காகச் சென்றார்கள், அவர்கள் ﷺ நோயாளிகளைப் பார்க்கச் செல்லும் போதெல்லாம் இந்த துஆவை ஓதுவார்கள்:

لاَ بَأْسَ طَهُورٌ إِنْ شَاءَ اللَّهُ

*பொருள்: அச்சப்பட ஒன்றுமில்லை, அல்லாஹ் நாடினால் நீர் நிவாரணம் பெற்றுவிடுவீர்* (புக்ஹாரி).

* * *

www.uzaifalahi.com